

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஜனவரி - 2020

*We Are Here..!! To Guide You..!!*



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 08.01.2020


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விருதுகள்
- புத்தக வெளியீடு






We Shine Academy™



## தமிழக நிகழ்வுகள்

- **சென்னை ஐஐடியில் "சாரங் -2020 கலைவிழா ஜனவரி 7-ம் தேதி தொடங்கியது.**
    - கருப்பொருள்: "2020 சாரங் விழா – மெட்ராஸ் நினைவுகள்"
    - முழுவதும் ஐஐடி மாணவர்களால் நடத்தப்படும் இந்த கலைவிழா 24 ஆண்டுகளை கடந்து தற்போது 25-வது ஆண்டாக வெள்ளி விழாவை எட்டியுள்ளது.
    - **செய்தி துளிகள்**
        - ஐஐடி மெட்ராஸ் 1959-ஆம் ஆண்டு "வெற்றி செயலில் இருந்து பிறக்கிறது" என்ற குறிக்கோளுடன் தொடங்கப்பட்டது.
        - மத்திய மனித வளத்துறை அமைச்சரை தலைமையாக கொண்ட இந்திய தொழில்நுட்ப கழக அவை (IIT Council) கட்டுப்பாட்டில் இயங்குகிறது.
        - இந்தியாவின் முதல் உள்நாட்டு நுண்செயலியான "சக்தி" நுண்செயலி சென்னை ஐஐடி மாணவர்களால் உருவாக்கப்பட்டது.

## தேசிய நிகழ்வுகள்

- **நடப்பு நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக குறையும்** என **மத்திய அரசு** தெரிவித்துள்ளது.
    - மத்திய புள்ளியியல் அலுவலகம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
    - முந்தைய நிதியாண்டில் 6.8 சதவீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி நடப்பு நிதியாண்டில் 5 சதவீதமாக குறைகிறது.
    - **செய்தி துளிகள்**

| | |
|---|---|
| முதல் காலாண்டு | ஏப்ரல் முதல் ஜுன் வரை |
| இரண்டாம் காலாண்டு | ஜுலை முதல் செப்டம்பர் |
| 3-ம் காலாண்டு | அக்டோபர் to டிசம்பர் |
| 4-ம் காலாண்டு | ஜனவரி முதல் மார்ச் வரை |

- இந்தியாவின் நிதியாண்டு ஏப்ரல் 1-ம் தேதி தொடங்கி மார்ச் 31 வரை
- தேசிய புள்ளியியல் அலுவலகம் மத்திய புள்ளியல் மற்றும் திட்டம் நடைமுறைப்படுத்தல் அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது

- **சபரிமலை வழக்கை விசாரிக்க** 9 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு அமைக்கப்பட்டுள்ளது.
    - உச்சநீதிமன்ற **தலைமை நீதிபதி எஸ்.ஏ.போப்டே தலைமையில் 9 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன**

**அமர்வு அமைக்கப்பட்டுள்ளது**

- சபரிமலையில் அனைத்து வயது பெண்களும் வழிபாடு செய்யலாம் என்று கடந்த 2018-ம் ஆண்டு முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான அமர்வு தீர்ப்பளித்திருந்தது.
- **செய்தி துளிகள்**
  - சபரிமலை வழக்கில் மேற்கோள் காட்டப்படும் அரசியலமைப்பு சட்டப் பிரிவுகள்:

| | |
|---|---|
| ஷரத்து 15 | பாகுபாட்டை தடை செய்கிறது |
| ஷரத்து 25 (1) | சமய சுதந்திரம் |
| ஷரத்து 26 | சமய விவகாரங்களை நிர்வகிக்கும் சுதந்திரம் |

  - இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் படி உச்சநீதிமன்றம் அரசியலமைப்பு சட்டத்தின் பாதுகாவலனாக விளங்குகிறது.

## விருதுகள்

- **தமிழகத்தைச் சேர்ந்த இரு ஊடகங்களுக்கு சர்வதேச யோகா தின விருது வழங்கப்பட்டுள்ளது.**
  - யோகா மூலம் ஆரோக்கியமான வாழ்க்கையை மேம்படுத்துதல் குறித்த பங்களிப்பைச் செய்த 30 ஊடகங்களுக்கு மத்திய செய்தி ஒலிப்பரப்பு துறை மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் வழங்கினார்

- சென்னை **தூர்தர்ஷன், தந்தி குழுமத்தைச் சேர்ந்த ஹலோ எஃ.ப்.எம்** ஆகியவற்றிற்கு விருதுகள் வழங்கப்பட்டன.
- **செய்தி துளிகள்**
  - சர்வதேச யோகா தினம் ஜூன் 21-ம் தேதி கொண்டாடப்படுகிறது.
  - இவ்விருதுக்கான தேர்வு குழு இந்திய பிரஸ் கவுன்சில் தலைவர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டிருந்தது.
  - இந்திய பிரஸ் கவுன்சில் தலைவர் சி.கே பிரசாத் ஆவார்.

## புத்தக வெளயீடு

- **பிரதமர் மோடியின் வாழ்க்கை குறித்த "கர்மயோதா கிரந்த்" என்ற புத்தகத்தை மத்திய உள்துறை அமைச்சர் வெளியிட்டார்**
  - **செய்தி துளிகள்**
    - விழாவில் பிரதமர் மோடி தலைமையிலான அரசின் பணிகளை உள்துறை அமைச்சர் பட்டியலிட்டார். அவை:
    - நாட்டில் 99 சதவீத வீடுகளுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளது.
    - ஆயூஷ்மான் பாரத் திட்டத்தின் மூலம் 50 கோடி பயன் பெற்றுள்ளார்.

WeShine Academy™

- 2022-ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் வீடு திட்டமும் 2024 –ம் ஆண்டுக்குள் அனைத்து வீடுகளுக்கும் குழாய் மூலம் குடிநீர் வசதியும் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## திருக்குறள்

**குறள் : 71**

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: இல்லறவியல்

குறள் அதிகாரம் : அன்புடைமை

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**

**புன்கணீர் பூசல் தரும்**

**விளக்கம்** : அன்புடையாரின் துன்பத்தைக் கண்டபோது ஒருவர் கண்களிலிருந்து சிந்துகின்ற கண்ணீரே உள்ளத்தின் அன்பை எல்லோரும் அறிய வெளிப்படுத்தும். ஆகையால், அன்பிற்கு அதைப் பிறர் அறியாமல் அடைத்து வைக்கும் தாழ்ப்பாள் இல்லை.

WeShine Academy™